**K G DENIM LIMITED**
**CIN : L17115TZ1992PLC003798**
THEN THIRUMALAI
METTUPALAYAM - 641 302.
COIMBATORE DISTRICT
TAMILNADU, INDIA.

kg Denim

Phone : 0091-4254-235240
Fax : 0091-4254-235400
email : cskgdl@kgdenim.in

**GST : 33AAACK7940C1ZW**

Date : 04-05-2024

To,

The Listing Department
BSE Limited
Phiroze Jeejeebhoy Towers
Dalal Street
Mumbai - 400 001.

Sir/Madam,

**Sub : Shutdown of major operations of the Company**

We have shutdown the major operations of the Company in view of the prevailing water scarcity in the District of Coimbatore.

Further, the Government of Tamil Nadu through the local District Administration has directed the Company not to draw the water from Bhavani river which is the only source of water for the Company.

Copy of the Direction issued by the District Administration through the vernacular language (Tamil) is enclosed for your reference.

Yours faithfully,

**For K G Denim Limited**

PALANIVEL RAJESH Digitally signed by PALANIVEL RAJESH Date: 2024.05.04 15:52:32 +05'30'

**P Rajesh**

**Company Secretary & Compliance Officer**

K G DENIM LIMITED COIMBATORE

தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| பொறி.சு.பொங்கியண்ணன்,பி.இ., | M/s.K.G.Denim Ltd., |
| உதவிசெயற் பொறியாளர், நீவது., | Jadayampalayam, |
| பவானிசாகர் உபகோட்டம், | Mavuthampalayam village |
| பவானிசாகர் | Mettupalayam(TK) Coimbatore(Dt) |

க.எண்.கோ.33 (WD)/ 2023/ நாள்: 25.03.2024

அய்யா,

பொருள்: தண்ணீரெடுத்தல் - பவானி ஆற்றிலிருந்து தொழிற்சாலை மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்காக தண்ணீர் எடுத்தல்- பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் - தொடர்பாக

பார்வை: உதவிப்பொறியாளர், நீப.பி பவானிசாகர் க.எண். கோ.10/2023 உ.பொ./நீ.ப.பி/ நாள் 25.03.2024

***

பவானி ஆற்றிலிருந்து தொழிற்சாலை மற்றும் கல்வி நிறுவனங்கள் தங்களது நிறுவனப் பயன்பாட்டிற்காக அரசிடமிருந்து அனுமதி பெற்று உரிய கட்டணம் செலுத்தி தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகின்றீர்கள். தற்பொழுது மழை பொய்த்து விட்டதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டதாலும், பவானி ஆற்றில் நீர் வரத்து மிக குறைவாகவே வரப் பெறுகிறது. பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அந்தந்த ஊராட்சி மூலம் பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்காக நீரேற்று நிலையம் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் பவானி ஆற்றில் தற்பொழுது மிக மிக குறைந்த அளவே (Low water flow) நீர் வரப் பெறுவதால் மேற்கண்ட நீரேற்று நிலையங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு பொது மக்களுக்கு சீராக தண்ணீர் விநியோகம் செய்ய முடியவில்லை என குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் அந்தந்த ஊராட்சியினர் கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர். அதனடிப்படையில் பவானி ஆற்றில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் பவானி ஆற்றில் உள்ள குடிநீர் உந்து நிலையங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் பவானி ஆற்றில் தண்ணீர் வரத்து சீராகி மறு உத்தரவு வறும் வரையில், தங்களது நிறுவனத்திற்கு ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதை 25.03.2024 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து
பவானிசாகர் உபகோட்டம்
பவானிசாகர்

நகல் செயற்பொறியாளர், நீ.வ.து, பவானிசாகர் அணைக்கோட்டம், பவானிசாகர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மேட்டுப்பாளையம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

உட்கோட்ட நடுவர்/ வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.பி.கே.கோவிந்தன், எம்.எஸ்.சி.,

## குற்றவியல் நடைமுறைச்சட்டபிரிவு 133-ன் கீழான உத்தரவு

ந.க. 02/2024/அ1 நாள்: 24.03.2024

பொருள்: தண்ணீர் எடுத்தல்- கோயம்புத்தூர் மாவட்டம்- கோயம்புத்தூர் வடக்கு கோட்டம்- மேட்டுப்பாளையம் வட்டத்திற்குட்பட்ட கிராமங்கள் - பவானி ஆற்றில் அரசு அனுமதி பெற்றும் / அரசு அனுமதி பெறாமலும் - பொது பயன்பாட்டில் நீர்நிலைகளில் தண்ணீர் எடுக்கப்பட்டு வருவது- வறட்சி காரமணாக – குற்றவியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 133-ன் கீழ் தடை செய்யப்படுதல்- தொடர்பாக.

பார்வை: கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரை நாள்: 24.03.2024

((((  ))))

உத்தரவு:

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டம், மேட்டுப்பாளையம் வட்டத்தை சார்ந்த கிராமங்களில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள் பவாணி ஆற்றில் ஏற்கனவே அரசு அனுமதி பெற்று தண்ணீர் எடுத்து வருவதும் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக அரசு அனுமதி பெறாமலும் தண்ணீர் எடுக்கப்பட்டு வருவது தெரியவருகிறது.

இந்நேர்வில், தற்போதைய கோடை காலத்தில் நிலவி வரும் நீர் பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் அனைவருக்கும் பற்றாக்குறையின்றி கிடைக்க ஏதுவாகவும், இக்கோடை காலத்தினை குடிநீர் பஞ்சமின்றி பொதுமக்களை காக்கும் பொருட்டும் வணிக பயன்பாட்டிற்காக தங்களது நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தண்ணீர் எடுத்தல் அனுமதியினை எதிர்வரும் ஜுன் 2024ம் மாதம் முடியும் வரை தற்காலிகமாக நிறுத்திவைத்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973, பிரிவு 133 (அ) மற்றும் (ஆ) ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இதனை மீறும் பட்சத்தில் அரசின் கடுமையான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் எனவும், நிரந்தரமாக தண்ணீர் எடுத்தல் அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.